| O.S.No. 82/2024 | DW1: திரு. ரவிச்சந்திரன்<br>த/பெ. திரு. கோதண்டராமன் | 02-04-2026 |
|---|---|---|

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. வாதி எனது சொந்த சித்தப்பா. எனது தந்தை, பெரியப்பா, சித்தப்பா ஆகியோர் மொத்தம் 5 பேர். எனது தாத்தாவும், அவரது வாரிசான மேற்படி 5 பேரும் 06.09.1964–ல் சொத்துக்களை பொறுத்து ஒரு பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைப்படிதான் அனைவரும் சொத்தினை அனுபவித்து வந்தார்கள். தாமோதர நாயுடுவின் பாகத்தினை அவர் விற்பனை செய்துவிட்டதால் அவரின் குமாரத்திகள் மல்லிகா, ரோஜா, வளர்மதி, லதா ஆகியோர் 30 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கானது வாதிக்கு சாதகமாக தீர்ப்பாகி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி வழக்கு பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அந்த வழக்கு O.S.No. 84/2017 நடந்திருக்கலாம், ஆனால் சரியாக தெரியவில்லை.

2. தாமோதர நாயுடு வழக்கு தாக்கல் செய்த சொத்தை தவிர மற்ற பாக சொத்தை பொறுத்து எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் 'D' ஷெட்யூல் சொத்தாக என் தந்தைக்கு பாகம் ஒதுக்கப்பட்டது. 'F' ஷெட்யூல் சொத்து வாதி ஹரிதாஸ்க்கு ஒதுக்கப்பட்டது. எங்களுடைய சொத்தில் வாதி பிரச்சனை செய்ததில்லை, வாதியின் சொத்தில் நாங்கள் பிரச்சனை செய்வதில்லை என்றால் சரிதான், அவரவர் பாகத்தினை அவரவர் அடைந்து அனுபவித்து வருகிறோம்.

3. எனது பதிலுரையில் சொல்லியுள்ள ஆவண எண். 1815/1978 கிரைய ஆவணத்தை பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆவண எண். 1815/1978 கிரைய பத்திரத்தில் தாவா சொத்து இடம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆவண எண். 1815/1978 கிரைய பத்திரப்படி என் தந்தை நாதமுனியிடமிருந்து கிரையம் பெற்றார். அந்த பத்திரத்தில் தாவா சொத்து இடம் பெறவில்லை என்றால் எழுதியிருக்கலாம்.

4. தாவா 1-வது அயிட்ட சர்வே எண். 871A3 -ஐ பாகப்பிரிவினை செய்தபோது 3 ஏக்கர் 92 சென்ட் இருந்தது என்று சொன்னால் சரிதான். UDR திட்டத்தின்போது மேற்படி சர்வே எண் 87/2, 87/3, 87/4, 87/5, 87/6, 87/7, 87/8 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் பிரித்திருக்கலாம். அந்த 3 ஏக்கர் 92 சென்ட்டில் பூபாலனுக்கு 98 சென்ட் பாத்தியம் என்று சொன்னால் கொல்லை பக்கத்தில் இருந்திருக்கலாம். மேற்படி 98 சென்ட்டினை 10.03.1981-ல் வாதி பூபாலனிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் எனது தந்தை முதல் சாட்சியாக சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. பூபாலனிடமிருந்து வாதி கிரையம் வாங்கிய இடத்தினை நாங்கள் அனுபவித்து வந்தோம், ஆனால் வாதி கிரையம் வாங்கியது எங்களுக்கு தெரியாது. பூபாலனிடமிருந்து வாதி கிரையம் பெற்ற சொத்தினை நானோ, எனது தந்தையோ அனுபவித்து வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. வாதி ஹரிதாஸ் 1965-ல் இராணுவத்தில் சேர்ந்து 18 ஆண்டுகளாக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். அதன்பிறகு, Ex-Service Man கோட்டாவில் திருவத்திபுரம் நகராட்சி ஓட்டுநராக வாதி பணிபுரிந்தார். வாதியின் மனைவி அங்கன்வாடி பணியாளராக பணி செய்து ஓய்வு பெற்றவர். எனக்கு என் தந்தை மூலமாக சுமார் 10 ஏக்கர் நிலம் வந்தது, அந்த சொத்தானது வடகம்ப்பட்டு கிராம எல்லையில் உள்ளது. அதேபோல் என் மனைவிக்கும் சுமார் 15 ஏக்கர் நிலம் மாமனார் வழியில் வந்திருக்கலாம், அதனை வாரத்திற்கு விட்டுள்ளோம்.

7. என் தாயாருக்கு மாங்கால் கிராமத்தில் நிலம் உள்ளது, அதன் விஸ்தீரனம் தெரியாது. எனது தந்தை சொத்தில் எனது அம்மாவும், தங்கையும் அவர்களது பாகத்தினை பொறுத்து 06.10.2017-ல் அக்கு பாக விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள். அந்த பத்திரமானது என் தந்தை பெயரில் உள்ள பட்டாவினை அடிப்படையாகக் கொண்டும், பாகப்பிரிவினைப்படி என் தந்தைக்கு கிடைத்ததை அடிப்படையாகக் கொண்டும் எழுதப்பட்டது.

8. தாவா 2-வது அயிட்ட சொத்தில் சர்வே எண்.130/2-ல் 60 சென்ட்டில் 30 சென்ட் வாதிக்கு பாகப்பிரிவினைப்படி வந்தது என்றால் சரிதான். தாவா 3-வது அயிட்ட சொத்தில் சர்வே எண்.763B1-ல் 28 சென்ட் வாதிக்கு பாகப்பிரிவினைப்படி வந்தது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா 3-வது அயிட்ட சொத்தில் சர்வே எண்.763B1-ல் 28 சென்ட் எனது தந்தைக்கு பாகப்பிரிவினைப்படி வந்ததா என்றால் வந்தது. பி.சா.ஆ.6 பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா 3-வது அயிட்ட சொத்து என் தந்தைக்கு வந்ததாக வாசகம் உள்ளதா என்றால் இல்லை, ஆனால், பட்டா, அடங்களில் எனது தந்தை பெயர் உள்ளது.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 11:48:55 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**